பக்கங்கள்:-20

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | பங்குனி 16 | சனிக்கிழமை | 30.03.2024 | அதிர்வு 242

### மொட்டு எம்.பி. ஒருவரால்

## இராஜாங்க அமைச்சரின் செயலாளருக்கு மிரட்டல்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், இராஜாங்க அமைச்சர் ஒருவரின் செயலாளரைத் தொலைபேசியில் அச்சுறுத்தியுள்ளார். 06

# முன்னாள் போராளிகளுக்கு உதவி செய்ய களமிறங்குகின்றது ‘அம்மான் படையணி’

## கருணா பகிரங்க அறிவிப்பு

“அம்மான் படையணி எனும் புதிய அமைப்பினூடாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள முன்னாள் போராளிகளின் நலன் பேணவுள்ளோம்.”

- இவ்வாறு தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) தெரிவித்தார். 06



# கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ஞானசாரர் வைத்தியசாலையில் அனுமதி

இஸ்லாமிய மதம் குறித்து சர்ச்சைக் கருத்து வெளியிட்ட குற்றத்துக்காக 4 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் சுகவீனம் காரணமாக சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஞானசார தேரரை நேற்று நேரில் பார்வையிட்ட ராவணா பலய அமைப்பின் செயலாளர் நாயகம் இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஞானசார தேரர் இதற்கு முன்னரும் நோய் நிலைமையால் பீடிக்கப்பட்டிருந்தார் என்றும், அதற்கான சிகிச்சைக்காகவே சிறைச்சாலை வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார் என்றும் இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் குறிப்பிட்டுள்ளார். 06



# அநுராதபுரம் சிறையில் இருந்து கைதிகள் இருவர் தப்பியோட்டம்



அனுராதபுரம் சிறைச்சாலையில் இருந்து இரண்டு கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர்.

நேற்று முற்பகல் அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர் என்று சிறைச்சாலைகள்ஊடகப்பேச்சாளர்காமினி பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலையின் உணவகத்தில் இருந்து இருவரும் தப்பிச் சென்றுள்ளனர்.

தப்பிச் சென்ற கைதிகளைத் தேடி விசாரணைகள் 06




வழக்குகள் தேங்கி, நாட்டின் நீதித்துறையே தள்ளாடுகின்றது. ஒவ்வொரு நீதிமன்றத்திலும் பல்லாயிரம் வழக்குகள் தீர்வுக்காக நீண்டகாலம் தவம் கிடக்கின்றன.

அடிப்படை உரிமை மீறல் வழக்குகள் அரசமைப்பின் 126 ஆம் பிரிவின் கீழ் உயர்நீதிமன்றத்தில்தான் தொடுக்கப்பட முடியும். அப்படி வழக்குத் தொடுக்கப்பட்டால் இரண்டு மாத காலத்துக்குள் வழக்கு விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டு விட வேண்டும் என்கின்றது அரசமைப்பு. தற்போதைய அரசமைப்பு நடைமுறைக்கு வந்த காலத்தில் - 70களின் கடைசியிலும் 80களின் 06

# மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் தொழில்நுட்பவியலாளர்கள் வேலைநிறுத்தம்




மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் பிரிவைச் சேர்ந்த கதிரியக்கத் தொழில்நுட்பவியலாளர்கள் நேற்று பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இன்றும் இந்தப் பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைப் பணிப்பாளரின் செயற்பாடுகளுக்கு எதிராக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அரச கதிரியக்கத் தொழில்நுட்பவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் சானக்க தர்மவிக்ரம தெரிவித்துள்ளார்.

இந்த வைத்தியசாலையிலுள்ள கதிரியக்கப் பிரிவு ஊழியர்களுக்குப் பணிப்பாளரால் கடந்த இரண்டு மாதங்களாக மேலதிக நேர கொடுப்பனவுகளுக்கு அனுமதி வழங்கப்படாமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வெளிநாட்டுக் கற்கைகளுக்கு ‘ஸ்பொட் அட்மிஷன்’ திட்டம்!

## யழ்ப்பாணம் ஜெட்விங் ஹோட்டலில் இன்றும் நாளையும்



வெளிநாட்டுக் கற்கைகளுக்கான சர்வதேச மத்திய நிலையம் (ICFS) மாணவர்களுக்கான சிறப்பு ‘ஸ்பொட் அட்மிஷன்’ திட்டத்தை அறிமுகம் செய்கிறது.

குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு இந்தத் திட்டம் அறிமுகம் செய்து வைக்கப்படவுள்ளது.

கனடா, லண்டன் மற்றும் ஜேர்மனி போன்ற நாடுகளில், செப்டெம்பர் 2024 இல் உயர்கல்வி வாய்ப்புகளை வழங்கவுள்ளது.

யாழ். ஜெட்விங் ஹோட்டலில் இன்றும் (மார்ச் 30), நாளையும் (31 ஆம் திகதி) “திட்டக் கல்வி யாழ்ப்பாணம்” என்ற இரண்டு நாள் சிறப்பு நிகழ்ச்சியை இலவசமாக நடத்த திட்டமிட்டுள்ளது என்று ICFS கல்வி நிலையத்தின் CEO சத்துரிகா திஸாநாயக்க தெரிவித்தார்.

“வெளிநாட்டுப் பல்கலைக்கழகப் பிரதிநிதிகள் பலர் கொழும்புக்கு வந்துள்ளனர், கொழும்பிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் ஏராளமான கல்வி நிகழ்வுகள் மற்றும் கண்காட்சிகள் நடக்கின்றன. எனினும், இவ்வாறான நிகழ்வுகள் பெரும்பாலும் யாழ்ப்பாணத்தைச் சென்றடைவதில்லை. யாழ்ப்பாணத்தில் திறமையான, தகுதி வாய்ந்த மாணவர்கள் பலர் இருப்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம். அவர்கள் இந்த வெளிநாட்டு வாய்ப்புகளைத் தேடும் திறன் கொண்டவர்கள் என்று என்று சத்துரிகா திஸாநாயக்க கூறினார்.

‘ஸ்பொட் அட்மிஷன்’ திட்டம், மாணவர்கள் 30 முதல் 40 நிமிடங்களுக்குள் தங்கள் சலுகைக் கடிதங்களைப் பெறக்கூடிய சிறப்பு நிகழ்வில் பங்கேற்க அனுமதிக்கிறது.

இந்த விடயம் தொடர்பில் ICFS கல்வி நிலையத்தின் CEO சத்துரிகா திஸாநாயக்க தெரிவித்துள்ளவை வருமாறு,

நாங்கள் இங்கிலாந்தில் உள்ள யோர்க் செயின்ட் ஜான் பல்கலைக்கழகத்துடன் கைகோர்த்துள்ளோம், எங்களுடன் நாட்டின் மேலாளர் திருமதி பாக்யா பெரேராவும் இணையவுள்ளார். லண்டன் கல்வி வாய்ப்புகளை நாடும் மாணவர்கள் மார்ச் 30 மற்றும் 31 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் எங்களைச் சந்திக்கலாம். கையில் ஒரு சலுகை கடிதத்துடன் செல்லுங்கள்.

பல்கலைக்கழகத்தில் இருந்து சலுகைக் கடிதத்தைப் பெறுவது பொதுவாக நீண்ட செயல்முறையாகும், வாரங்கள் அல்லது மாதங்கள் கூட ஆகும். இருப்பினும், நிகழ்ச்சியின் போது, மாணவர்கள் சில நிமிடங்களில் யார்க் செயின்ட் ஜான் பல்கலைக்கழகத்தில் இருந்து சலுகைக் கடிதத்தைப் பெறுவதற்கு நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம். இது அனைத்து மாணவர்களுக்கும் தேவை.

வருகை தருவோர் பாஸ்போர்ட், கல்விப் பதிவுகள் மற்றும் சேவைக் கடிதங்கள் உள்ளிட்ட ஆவணங்களைக் கொண்டு வர வேண்டும். வரவிருக்கும் சேர்க்கைக்கான சலுகைக் கடிதத்துடன் அவர்கள் வெளியேறுவதை உறுதிசெய்ய வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் முதுகலைப் பட்டதாரி மாணவர்களுக்குக் கடன் வாய்ப்பை முதன்முறையாக அறிமுகப்படுத்துவதில் ICFS மகிழ்ச்சி அடைகிறது.

கனடாவில் படிப்புக்கான முழுச் செலவையும் உள்ளடக்கும் கடன் வசதியை நாங்கள் அறிமுகப்படுத்துகிறோம். இது கனடாவில் படிப்பதை வெறும் கனவாக மாற்றாமல் அடையக் கூடியதாக ஆக்குகிறது. கடனுக்கான மதிப்பீடு முற்றிலும் கல்வி அளவுகோல் மற்றும் பட்டப்படிப்புக்குப் பிறகு வேலை வாய்ப்பின் அடிப்படையில் இருக்கும்.

ஜேர்மனியை மாணவர்களுக்கு விருப்பமான இடம் அடையாளம் காணப்பட்டுள்ளது. ஜேர்மனி உயர் கல்வியில் சாதனை படைத்த மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படுகிறது. ஜேர்மனியில் உள்ள பல்கலைக்கழக படிப்புகளுக்கு கூட, மாணவர்கள் குறைந்த பட்சம் 3000 யூரோக்கள் செலுத்தலாம் மற்றும் மீதமுள்ள தொகையை தவணைகளில் செலுத்தலாம்.

ஜேர்மனியில் படிக்க விரும்பும் அனைத்து மாணவர்களும், இளங்கலை அல்லது முதுகலை பட்டதாரிகளாக இருந்தாலும், மார்ச் 30 மற்றும் 31 ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் ஜெட்விங், யாழ்ப்பாணத்தில் எங்களை சந்திக்கலாம். – என்றார்.



## வட்டுக்கோட்டை இளைஞன் கடத்திப் படுகொலை:

# சந்தேகநபர்களின் தொலைபேசி உரையாடல் அறிக்கையைப் பெறுவதற்கு மன்று அனுமதி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – வட்டுக்கோட்டை இளைஞன் படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களின் தொலைபேசி உரையாடல் அறிக்கையைப் பொலிஸார் பெற்றுக்கொள்வதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த 11ஆம் திகதி காரைநகர் பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் சென்று விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த இளம் தம்பதியினரைப் பொன்னாலைப் பாலத்துக்கு அருகில் உள்ள கடற்படை முகாமுக்கு முன்பாக வைத்து வன்முறைக் கும்பல் கடத்திச் சென்று, கணவனைச் சித்திரவதைக்கு உள்ளாக்கிப் படுகொலை செய்துள்ளதுடன் மனைவியை வீதியில் இறக்கி விட்டுச் சென்றிருந்தனர்.

குறித்த வழக்கு நேற்றுமுன்தினம் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இறுதியாகக் கைது செய்யப்பட்ட மூவரின் தொலைபேசி அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்காகப் பொலிஸார் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அந்த அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை இளைஞன் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் 6 பேர் கைது செய்யப்பட்ட நிலையில், கடந்த 24ஆம் திகதி மேலும் 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 9 சந்தேகநபர்களும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது, 8, 9 ஆம் சந்தேகநபர்களை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறு பொலிஸார் மன்றில் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதன் பிரகாரம், எதிர்வரும் 4 ஆம் திகதி அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

பொன்னாலைக் கடற்படை காவலரணுக்கு அருகில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமராவின் டிஜிட்டல் வீடியோ பதிவகத்தைப் பகுப்பாய்வுக்கு உட்படுத்துமாறு பொலிஸார் மன்றில் கோரிக்கை விடுத்திருந்தனர்.

பொலிஸாரின் விண்ணப்பத்தை ஏற்ற நீதிவான், அதனை இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டுள்ளார்.

இதையடுத்து மேற்படி வழக்கு எதிர்வரும் 4 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த கொலைச் சம்பவம் தொடர்பாக மேலும் 6 பேர் தேடப்பட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்ததுடன் மேற்படி சந்தேகநபர்களுக்கு அடைக்கலம் வழங்கும் வகையில் யாராவது செயற்பட்டால் அவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டனர்.

# சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் கைது!

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை – தொவனிபியவர பகுதியில் ஒன்பது வயது சிறுமிக்கு ஆணுறுப்பைக் காட்டிய குற்றச்சாட்டின் கீழ் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த 27 ஆம் திகதி சிறுமி தனியாக வீட்டில் இருந்தபோது மேற்படி நபர் ஆணுறுப்பைக் காட்டினார் என்று தாயாரிடம் சிறுமி கூறியதையடுத்து தாயார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். அதற்கமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் சந்தேகநபர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

மஹதிவுல்வெவ – தெவனிபியவர பகுதியில் வசித்து வரும் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தரான பட்டிப்பல ஆராச்சிகே சுனந்த ஜயசூரிய என்பவரே கைதாகியுள்ளார்.

மேற்படி சந்தேகநபர், சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவின் பொறுப்பதிகாரி செல்வி ரஞ்சனி உள்ளிட்ட அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரைத் திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

**இலங்கை கிரிக்கெட்டை உலகில் தலைசிறந்ததாக மீண்டும் காண்பதே எதிர்பார்ப்பு**

# அரசியலையும் விளையாட்டையும் தனித்தனியாக பேண வேண்டும்!

**சிங்கள விளையாட்டுக் கழகத்தின் 125 ஆண்டு பூர்த்தி விழாவில் ஜனாதிபதி தெரிவிப்பு**














இலங்கை கிரிக்கெட்டை உலகில் தலைசிறந்தாக மீண்டும் காண்பதே எதிர்பார்க்கும் என்றும், அதற்கு அவசியமாக அனைத்து ஒத்துழைப்புக்களையும் அரசு பெற்றுக்கொடுக்கும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

அத்துடன், அரசியலையும் விளையாட்டையும் தனித்தனியாகப் பேண வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, அரசியல்வாதிகள் விளையாட்டுக் கழகங்களில் உயர் பதவிகளை வகிப்பதைத் தடுக்க முடியுமானால் சிறந்தது என்றும் கூறினார்.

கொழும்பு ஷங்ரீலா ஹோட்டலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சிங்கள விளையாட்டுக் கழகத்தின் 125ஆவது ஆண்டு பூர்த்தி விழாவிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

சிங்கள விளையாட்டுக் கழகத்தின் 125 வருட வரலாற்றைக் குறிக்கும் வகையில் புத்தகமும் முத்திரையொன்றும் வெளியிடப்பட்டது.

சர்வதேச கிரிக்கட் களத்தில் இலங்கை அணியை வழிநடத்திய சிங்கள விளையாட்டுக் கழகத்தின் வீரர்களை ஜனாதிபதி இதன்போது பாராட்டியதுடன், அவர்களுடன் குழு புகைப்படமும் எடுத்துக்கொண்டார்.

இவ்விழாவில் மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"றோயல், சென். தோமஸ், வெஸ்லி உள்ளிட்ட பாடசாலைகளில் இருந்து கிரிக்கெட்டில் இணைந்தவர்கள் அனைவரும் இங்கு வந்து சிங்கள விளையாட்டுக் கழகத்துடன் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தியுள்ளனர்.

அதேபோன்று எனது பாட்டனாரான மீதெனிய அதிகாரம், எனது தாத்தா சி.எல். விக்கிரமிசிங்க உட்பட அக் காலத்தைச் சேர்ந்த பலரும், இலங்கையர் என்ற அடையாளத்தை நிலைநாட்ட விரும்பியதாலேயே சிங்கள விளையாட்டுக் கழகத்தில் இணைந்தனர். சுதந்திரத்திற்குப் பின்னர் எனது தந்தையாரும் இணைந்துக்கொண்டார்.

அன்று இவ்வாறான விளையாட்டுக் கழகங்களை உருவாக்கினோம். தமிழ சமூகமும் விளையாட்டுக் கழகங்களை உருவாக்கின. அவை இன மோதலுக்காக அன்றி, பல்வேறு கழகங்கள் வாயிலாக தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்தும் முயற்சியாகும். அவை மதம் அல்லது குலத்தை மையப்படுத்தியவை அல்ல. மாறாக மொழி மற்றும் கலாச்சாரத்தை அடிப்படையாக கொண்டவையாகும். மலாயர்களும் தங்களுக்காக கழகத்தை உருவாக்கியிருந்தனர். அவற்றில் சிங்களவர், தமிழர், மலாயர் என அனைவரும் ஒன்று சேர்ந்துக் கொண்டனர். பின்னாளில் அனைவரும் ஒன்றிணைந்து பொது அடையாளத்தைப் பெற்றுக்கொண்டோம்.

சிங்கள விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் தலைவர்களாக எமது கட்சியின் தலைவர்களும் செயற்பட்டுள்ளனர். டி.எஸ். சேனாநாயக்க , முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவும் தலைமைப் பதவி வகித்துள்ளனர். இது எமக்கு கௌரவமாகும். பிற்காலத்தில் உங்கள் விளையாட்டுக் கழகத்தில் நானும் உறுப்பினராகச் சேர்ந்தேன். ஆனால், ஒரு அரசியல்வாதியாக நான் அதிலிருந்து விலகியிருக்க தீர்மானித்தேன். இன்றைய அரசியல் நிலவரம் டி.எஸ்.சேனநாயக்க, ஜே.ஆர்.ஜயவர்தனவின் ஆட்சிக்காலத்தில் இருக்கவில்லை.

விளையாட்டுக் கழகங்களில் அரசியல்வாதிகளுக்கு உயர் பதவிகள் வழங்காமல் இருப்பது அனைவருக்கும் நல்லதாகும் என நம்புகின்றேன். அதேபோல் அரசியலையும் விளையாட்டையும் தனித்தனியாக வைத்திருப்பது காலோசிதமானதாகும்.

அதனால் நாம் விளையாட்டிலிருந்து விலகி இருக்கிறோம் என்று கூறவில்லை. உங்களின் தேவைகள் குறித்து நாம் கவனம் செலுத்துவோம். நமது தலைவர்களின் சம்பிரதாயங்களை பேண வேண்டியது கடமையாகும். எனவே, சிங்கள விளையாட்டு கழகத்திற்குச் சொந்தமான காணியை 99 வருட குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு தேவையான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிக்குமாறு விளையாட்டுத் துறை அமைச்சருக்கு பணிப்புரை விடுத்துள்ளேன்.

அதேபோல், இலங்கை கிரிக்கெட்டை பாதுகாப்பதோடு, கிரிக்கெட்டில் இலங்கை முன்னணி இடத்தைப் பிடிக்க வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

இந்த வருடம் கிரிக்கெட் வளர்ச்சிக்காக அரசு ஒரு பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. அடுத்த வருடம் மேலும் அதிக தொகையை வழங்குவோம். அந்தப் பணம் உங்கள் விளையாட்டுக் கழகத்தின் உறுப்பினரான சிதத் வெத்தமுனி தலைமையிலான அறக்கட்டளையால் பேணப்படும், அதனூடக கிராமப்புறப் பாடசாலைகளில் கிரிக்கெட்டை மேம்படுத்தவும், கிரிக்கெட் போட்டிகளை நடத்தி கிராமிய அளவில் கிரிக்கெட்டை பலப்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

1000 -1500 பாடசாலைகளில் கிரிக்கெட்டை மேம்படுத்த வேண்டும். பின்னர் தேசிய அணிக்கு

05

இலங்கை கிரிக்கெட்டை உலகில் தலைசிறந்ததாக மீண்டும் காண்பதே எதிர்பார்ப்பு

# அரசியலையும் விளையாட்டையும் தனித்தனியாக பேண வேண்டும்!

சிங்கள விளையாட்டுக் கழகத்தின் 125 ஆண்டு பூர்த்தி விழாவில் ஜனாதிபதி தெரிவிப்பு





(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தேவையான கிரிக்கெட் வீரர்களைத் தெரிவு செய்வதற்கான குழாம் ஒன்றை உருவாக்க வேண்டும். கிரிக்கெட் விளையாட்டை பலப்படுத்த மேலும் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். இப்பணிகளில் கிரிக்கெட் சபை மற்றும் விளையாட்டுக் கழகங்கள் மீது பெரும் பொறுப்பு சார்ந்துள்ளது.

அதேநேரம் சிங்கள விளையாட்டுக் கழகம் இந்த நாட்டில் கிரிக்கெட்டுக்கு ஆற்றிய பங்களிப்புக்காக நன்றி தெரிவிக்கின்றேன். நாம் அனைவரும் ஒன்றிணைந்து இலங்கையை கிரிக்கெட்டில் உலகின் தலைசிறந்த நாடாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.” – என்றார்.

ஜனாதிபதியின் பாரியார் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க, சுற்றுலா மற்றும் காணி , இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் சம்மி சில்வா, சிங்கள கிரிக்கெட் சபையின் தலைவர் இந்துனில் டி சில்வா, செயலாளர் வசந்த விஜேசேகர,பொருளாளர் நிலங்க பீரிஸ், நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், சிங்கள கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவர்கள், கிரிக்கெட் அணி வீரர்கள், முன்னாள் இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் தலைவர் நசார் ஹுசைன், சர்வதேச கிரிக்கெட் சபையின் போட்டி நடுவர் ரஞ்சன் மடுல்கல்ல உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# பணவீக்கம் குறைவடைந்த போதிலும் பொருள்களின் விலை குறையவில்லை

## புள்ளிவிவரத் திணைக்களம் தகவல்

கடந்த சில மாதங்களில் பணவீக்கம் குறைவடைந்த போதிலும், பொருள்களின் விலை குறிப்பிடத்தக்க அளவு குறைவடையவில்லை எனத்தொ கை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்த திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் சியாமலி கருணாரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வ தரவுகளுக்கமைய, நாட்டின் தனிநபர் செலவீனம் அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் தனிநபர் செலவீனம் 16 ஆயிரத்து 524 ரூபாவாக பதிவாகியிருந்தது.

எனினும், புதிய தரவுகளுக்கமைய, ஜனவரி மாதம் அந்த செலவீனம் 490 ரூபாவால் அதிகரித்துள்ளதாகத் தொகை



மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் சியாமலி கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

# ஊடக தூது மடலின் இரண்டாவது வெளியீட்டு விழா நாளை யாழில்

## தில்லைநாதனுக்கு விருது

ஊடகத் தூது மடல் இரண்டாவது வெளியீட்டு விழாவும், “ஊடகவியல் கற்போம் – தமிழ் கத்தோலிக்கச் செய்தி” லங்கா இணைய யூரியூப் தள திறப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.கொழும்புத்துறைபீச்றோட்டில்அமைந்துள்ளபிசப்சவுந்தரம் மீடியா சென்ரறில் நாளை காலை 10 மணிக்கு ஊடகத் தூது மடலின் பிரதம ஆசிரியர் கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் தலைமையில் நிகழ்வு ஆரம்பமாகின்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மூத்த ஊடகவியலாளரும் கொழும்பு தினக்குரல் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியருமான வீரகத்தி தனபாலசிங்கம் கலந்துகொள்கின்றார். சிறப்பு விருந்தினர்களாக மூத்த ஊடகவியலாளரும் தினக்குரல் வார மலரின் முன்னாள் ஆசிரியருமான பாரதி இராஜநாயகம், ஓய்வுநிலை அதிபர் அ.சார்ள்ஸ் அரியகுமார், மூத்த ஊடகவியலாளர் சின்னத்துரை தில்லைநாதன், கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் வேல் நந்தகுமார் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

நிகழ்வில் ஊடகத் தூது விருது வழங்கலும் இடம்பெறும். ஊடகத்துறையில்ஐம்பதுஆண்டுகளுக்குஅதிகமாகஅர்ப்பணிப்புடன் பணியாற்றி வரும் வடமராட்சி மூத்த ஊடகவியலாளர் சின்னத்துரை தில்லைநாதனுக்கு ஊடகத் தூது மடலின் 2024ஆம் ஆண்டுக்கான ஊடகத் தூது விருது வழங்கப்படுகின்றது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஆரம்பத்திலும் – அப்படித்தான் நடந்தது.

ஆனால் இப்போது...?

தாக்கல் செய்யப்பட்ட சில அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரணைக்கு ஏற்பதா என்ற பரிசீலனை கூட முடியாமல், நான்கு வருடங்களுக்கு மேல் அவை பதிவாளர் கோவைகளில் பதுங்கிக் கிடக்கும் அவலம்.

வழக்குகளை விசாரிக்கப் போதிய நீதிமன்றங்கள், நீதிபதிகள் இல்லை என்பது இப்பிரச்சினைக்கான அடிப்படைக் காரணங்களில் பிரதானமானது.

மேனிலை நீதிமன்றங்களான மேன்முறையீட்டு நீதிமன்றம், உயர்நீதிமன்றம் ஆகியவற்றுக்கு நீதியரசர்களை நியமிக்கின்றமை தொடர்பில் அரசியல் துறைகளுக்குள் உள்ள இழுபறி இந்த நிலைமையை மேலும் மோசம் அடையச் செய்யப் போகின்றது.

பதினேழு நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்றத்தில் ஏற்கனவே இரண்டு நீதியரசர் பதவிகள் நிரப்பப்படாமல் உள்ளன. இவ்வாண்டு இறுதியில் பிரதம நீதியரசர் பதவி உட்பட நான்கு நீதியரசர் பதவிகள் வெற்றிடமாகும்.

அதேபோல இருபது நீதியரசர்களைக் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்ற ஆயத்தில் மேலும் மூன்று நீதியரசர்கள் பதவிகள் வெற்றிடமாக உள்ளன.

ஆனால் உயர்நீதிமன்றத்துக்கு ஒரு நீதியரசரை நியமிக்கின்றமை தொடர்பாக அரசமைப்புக் கவுன்ஸிலுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் முறுகல் நிலை காரணமாக மேனிலை நீதிமன்றங்களில் நீதியரசர் பதவிகளுக்கு ஏற்படும் வெற்றிடங்களுக்கு புதிய நீதியரசர்களை நியமிக்கும் விவகாரம் பெரும் இழுபறிக்கு உள்ளாகியிருக்கின்றது. விவகாரம் உயர் நீதிமன்றத்தின் விசாரணை வரைப் போயிருக்கிறது.

இந்த விடயத்தில் இணக்கமான தீர்வு கிட்டாதவரை புதிய நீதியரசர்கள் நியமனம் ஏதும் நடக்காது என்கின்றன விடயம் அறிந்த வட்டாரங்கள். அதுதான் நிலைமை என்றால் நீதித்துறை – குறிப்பாக மேனிலை நீதிமன்றங்களின் விசாரணைகள் – விரைவில் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகி விடும் என எதிர்பார்க்கலாம்.

வழமையாக, மேனிலை நீதிமன்றங்களுக்கு நீதியரசர்களை நியமிப்பதற்கு புதிய பரிந்துரைகளை ஜனாதிபதி அனுப்புவார். அதனை நாடாளுமன்றத்தில் இயங்கும் அரசமைப்புக் கவுன்ஸிலில் அங்கீகரிக்க, நியமனத்தை ஜனாதிபதி வழங்குவார். இதுதான் நடைமுறை.

இப்போது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசராக இருப்பவர் நீதியரசர் நிஸங்க பந்துல கருணாரட்ன. அவரது நீதித்துறைச் செயற்பாடுகள் தொடர்பாக நீதிமன்றத்தில் சட்டரீதியாக நிரூபிக்கப்படாத – அரசல் புரசல் பேச்சுக்களும் குற்றச்சாட்டுகளும் உண்டு.

நீதியரசர்கள் சிரேஷ்ட தர நிலையில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசரான இவரே உயர் நீதிமன்றத்திற்கு அடுத்து நியமனம் பெற வேண்டியவர்.

அவரது பெயரை ஜனாதிபதி கடந்த ஜனவரியில் உயர் நீதிமன்ற நியமனத்துக்குப் பரிந்துரைத்தார். ஆனால் ஒன்பது பேர் கொண்ட அரசமைப்பு கவுன்ஸிலில் இருக்கும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் மூவரும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும், எதிரணியினரின் கபீர் காசீமும் என ஐந்து பேர் அந்தப் பரிந்துரையை அங்கீகரிக்க மறுத்து விட்டனர்.

அதனால் விடயம் இழுபறியில் நிற்கின்றது. தமது பரிந்துரையை அரசமைப்புக் கவுன்ஸில் அங்கீகரிக்காமல் விட்டால், புதிய பரிந்துரைகளை வழங்குவதில்லை என்ற பிடிவாதத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருக்கின்றாராம். இந்தப் பின்புலத்தில் காலம் இழுபடுகின்றது. புதிய நியமனங்களும் இல்லை.

இதற்கிடையில் நீதியரசர் நிஸங்க பந்துல கருணாரட்னவின் நியமனத்தை உறுதி செய்ய மறுத்தமைக்கு எதிராக சட்டத்தரணி ஒருவர் பொதுநலன் அடிப்படையில் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்திருக்கின்றார். அந்த மனு தொடர்பாக சில சுவையான விடயங்கள் உள்ளன. ஒன்றை மட்டும் இன்று குறிப்பிட்டு, பிற விடயங்களை அடுத்து வரும் நாள்களில் விவரிக்கிறேன்.

இந்த மனு முதலில் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையில் கூடிய உயர்நீதிமன்ற ஆயத்தின் முன் வந்தது. நீதியரசர் நிஸங்க பந்துல கருணாரட்னவின் பெயரை உயர்நீதிமன்ற நியமனத்திற்குப் பரிந்துரைத்தவர்களில் நானும் ஒருவன் என்பதால் இந்த வழக்கை விசாரிக்க முடியாது என்று அவர் ஒதுங்கிக் கொள்ள, ஒத்திவைக்கப்பட்ட அந்த மனு நேற்று முன்தினம் மீண்டும் நீதியரசர்கள் அ.துரைராஜா, நவாஸ், அர்ஜுன ஒபயசேகர ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற ஆயத்தின் முன் வந்தது.

சம்பந்தப்பட்ட நீதியரசர் நிஸங்க பந்துல கருணாரட்னவுடன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீண்ட காலம் சக நீதியரசராக இருந்து விசாரணைகளை நடத்தியவன் என்ற முறையில், இந்த வழக்கை நான் விசாரிக்க முடியாது என்று தெரிவித்து நீதியரசர் அர்ஜுன ஒபயசேகர விலகிக் கொள்ள வழக்கு மீண்டும் ஏப்ரல் 30–ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டு விட்டது.

இப்படிப் பார்த்தால் இப்போது உயர்நீதிமன்றத்தில் நீதியரசர்களாக இருக்கும் பலர் நீதியரசர் பந்துல கருணாரட்னவுடன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சக நீதியரசர்களாக இருந்து பணியாற்றியவர்கள்தாம்.

ஆக, இனி இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படும் போது இன்னும் எத்தனை உயர்நீதிமன்ற நீதியரசர்கள் இதே காரணத்தைக் கூறி ஜாகா வாங்கப் போகின்றார்கள், எப்போது இந்த வழக்கு விசாரணை முடியும் என்பவை எல்லாம் விடை தெரியாத வினாக்கள்.

அதுவரை மேனிலை நீதிமன்றங்களுக்கு நீதியரசர்கள் நியமனம் நடக்காமல் இழுபடுமோ தெரியவில்லை.

சில சமயங்களில் ஜனாதிபதித் தேர்தல் முடிவுதான் இந்த முட்டுக்கட்டை நிலைக்கு முடிவு கட்டுமோ என்பதும் தெரியவில்லை.

வழக்குப்பற்றிய மேலதிக தகவல்களை அடுத்து வரும் நாள்களில் பார்ப்போம்.

## அநுராதபுரம் சிறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## இராஜாங்க அமைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இது தொடர்பில் மேற்படி இராஜாங்க அமைச்சரின் செயலாளர் நேற்று முறைப்பாடு செய்துள்ளார் என்று பேராதனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த எம்.பி. ஒருவர் நேற்று (நேற்றுமுன்தினம்) எனக்குத் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு நான் வேறு ஒருவருடன் தவறான உறவில் இருந்தேன் என்றும், அது உண்மையென்றால் எனது வாயை வெட்டுவேன் என்றும் மிரட்டியுள்ளார்." – என்று பொலிஸில் மேற்படி இராஜாங்க அமைச்சரின் செயலாளர் முறைப்பாடு செய்துள்ளார்.

## கடூழியச் சிறைத்தண்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இதேவேளை, கொழும்பு மேல் நீதிமன்றம் வழங்கிய தண்டனைக்கு எதிராக ஞானசார தேரர் மேன்முறையீடு செய்துள்ளார் என்றும் இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் மேலும் தெரிவித்துள்ளார்.

## முன்னாள் போராளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அம்மான் படையணி எனும் புதிய அமைப்பினூடாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள முன்னாள் போராளிகளின் நலன் பேணவுள்ளோம்.

இந்தச் செயற்பாடுகளுக்குப் புலம்பெயர்ந்து வாழும் மக்களின் ஆதரவு கிடைத்துள்ளது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட, கணவனை இழந்த குடும்பத் தலைவிகளும், விடுதலைப்புலிகள் மாத்திரமல்லாது அனைத்து இயக்கங்களையும் சேர்ந்த போராளிகளும் வாழ்வாதாரமற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

அவர்களுக்காகப் புது வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளோம்.

அம்மான் படையணி அமைப்பு போராளிகளின் நலம் பேணுவதற்காக உருவாக்கப்பட்டு, பெரும்பாலும் வடக்கு மாகாணத்திலேயே தற்போது செயற்பட்டு வருகின்றது. கிழக்கு மாகாணத்திலும் அதன் செயற்பாடுகளை விரிவாக்கத் திட்டமிட்டுள்ளோம்." – என்றார்.



# கணபதி இந்து மகளிர் மகா வித்தியாலயத்தின் ஶ்ரீசித்தி விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகம்

கொழும்பு 12 – பண்டாரநாயக்க மாவத்தை, கணபதி இந்து மகளிர் மகா வித்தியாலயத்தின் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பஞ்சகுண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

கொழும்பு – பண்டாரநாயக்க மாவத்தை கணபதி இந்து மகளிர் மகா வித்தியாலயத்தில் கல்வியும், கலையும், ஒழுக்கமும் மேலோங்கி விளங்கி சங்கடம் நீக்கி அருள் பாலிக்கும் சித்தி விநாயகப் பெருமானுக்கும் புதிய மூர்த்தியாகிய கல்வி தெய்வமாம் சரஸ்வதி தாயாருக்கும் கடந்த புதன்கிழமை விக்னேஸ்வர பூஜை மற்றும் கணபதி ஹோமத்துடன் கிரியைகள் ஆரம்பமாகின.

இந்தநிலையில், நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை முதல் எண்ணெய்க் காப்பு சார்த்துதல் நடைபெற்று. நேற்று வெள்ளிக்கிழமை காலை முதல் விக்னேஸ்வரபூஜை, யாகசாலாப் பிரவேசம், மஹா பூர்ணாகுதி, விசேட பூஜை, திருமுறைபாராயணம் மற்றும் ஸ்தூபி அபிஷேகத்துடன் பிரதான கும்பம் வீதி உலா இடம்பெற்றது.

அதன்பின்னர், சித்தி விநாயகப் பெருமான், சரஸ்வதி தாயார் மற்றும் மூஷிகம், பலிபீடம் ஆகிய மூர்த்திகட்கு மஹா கும்பாபிஷேகம் கொழும்பின் மூத்த சிவாச்சாரியார்களால் சிறப்பாக நடத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வருகை தந்திருந்த அனைத்து அடியார்களுக்கும் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவருக்கும் பாடசாலையின் பதில் அதிபர் திருமதி கிருஷ்ணவதனி தலைமையில் அன்னதானம் வழங்கி வைக்கப்பட்டது.









நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பொருளாதாரம் தேறவில்லை

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை ஓரளவு மீட்டுவிட்டார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்று அவருக்கு சார்பான தரப்புகள் பீற்றுகின்றன. அவரும் கூட அடிக்கடி அந்தச் சாரப்பட கருத்துக் கூறித் தமது சாதனையைப் பெருமிதப்படுத்தத் தவறுவதில்லை.

ஆனால், அது உண்மை அல்ல என்பதுதான் யதார்த்த நிலைமை.

அத்தியாவசியப் பொருள்கள் உச்சவில்லை என்றாலும் சந்தையில் அவை கிடைக்கின்றன. எரிபொருள், எரிவாயுத் தட்டுப்பாடு இல்லை. மின்வெட்டு இல்லை. மருந்துப் பொருள்களின் தட்டுப்பாடு பெரும் பாதிப்பு தரும் நிலையில் இல்லை. அரச ஊழியருக்கு சம்பள உயர்வு கிட்டுகின்றது. ஓய்வூதியம் அதிகரிக்கப்படுகின்றது.

ஆகவே, நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு விட்டது என்று கருதலாம் என சில தரப்புகள் எண்ணுகின்றன. அப்படிப் படமும் காட்டுகின்றன. ஆனால் அது தப்பு. முற்றிலும் தப்பு.

கடனிறுக்க வகையற்ற - வக்கற்ற - வங்குறோத்து நாடு என்ற இழிநிலையில் இருந்து நாடு இன்னும் மீளவில்லை. சர்வதேச நாடுகளுக்கும், தனியார் தரப்புகளுக்கும் கொடுக்கப் பட வேண்டிய கடன்களை - கடன் தவணை நிலுவைகளை - வட்டித் தொகைகளை - நாடு இன்னும் மீளச் செலுத்தத் தொடங்கவே இல்லை. கடனிறுக்க வகையற்ற நாடு என்ற இழிநிலை தொடர்கின்றது.

ஆக, இடையில் முண்டு கொடுத்துக் காப்பாற்ற வந்த சர்வதேச நாணய நிதியத்தின் கடனில் - கடன் உறுதியில் - உதவியில் - நாட்டின் அன்றாட சீவியம் ஓடுகின்றது. அவ்வளவு தான்.

கடன்களையும் நிலுவைகளையும் செலுத்தாமல் இருக்கும்போது கூட, தனது சொந்த வருமானத்தில் தனித்து நிற்கும் உறுதியைக் கூட நாடு பெறவே இல்லை. இப்போதும் கூட 'வரவு எட்டணா, செலவு பத்தணா, கடைசியில் துந்தணா' என்று துண்டு விழும் நிலைமைதான்.

இந்தச் சீத்துவத்தில் நாட்டின் பொருளாதார நிலைமை மேம்படுவதாகக் காட்டுவது சுத்த அபத்தம். கோமாளித்தனம்.

அன்றாட வாழ்வுக்கு - அனைத்துப் பொருள்களுக்கும் - இறக்குமதியில் தங்கி இருக்கும் அவலம் நமது நாட்டுக்கு. இறக்குமதிக்கு சமனான தொகைக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய சுய உற்பத்தி - தன்னிறைவுப் பொருளாதாரம் - குறுகிய தூரத்தில் கூடத் தெரியவில்லை. வெளிநாட்டுக் கடன் மீள் செலுத்துகையை நிறுத்தி இருக்கின்றமையால் ஏற்றுமதிக்கு எதிரான இறக்குமதி அதிகமாக இருந்தாலும் அதன் அழுத்தம் பெரிய அளவில் உணரப்படாமல் இருக்கின்றது. அவ்வளவுதான்.

நாட்டின் போக்கு ஏற்றுமதிப் பொருளாதாரத்தை நோக்கி நகரும் சாத்தியங்களும் தென்படவில்லை. வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை விடயம் ஓரளவு திருப்தி தரும் முன்னேற்றம். வெளிநாட்டில் பணியாற்றும் இலங்கையர்கள் நாட்டுக்கு சட்டரீதியாக அனுப்பும் பணத்தின் வரவு ஓரளவு தேறியிருக்கின்றது.

இவை மட்டும் நாட்டின் பொருளாதாரம் மேம்பட்டு விட்டதாகக் கருதுவதற்கு போதுமானவை அல்ல.

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது கொவிட் தொற்றுக்கு முந்தைய போக்கை இன்னும் மீள எட்டவில்லை. அதை விட இன்னும் சுமார் 25 வீதம் குறைவாகவே உள்ளது.

அண்மைக் காலமாக சில முன்னேற்றங்கள் உள்ள போதிலும், இன்னமும் இலங்கையின் பொருளாதாரம் அபாயத்திலேயே உள்ளது என பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட ஆலோசனை நிறுவனமான ஒக்ஸ்போர்டு எகனாமிக்ஸ் (Oxford Economics) தெரிவித்துள்ளது.

பொருளாதாரம் மோசமான நிலையில் இருப்பதால் இன்னும் கணிசமான அக்கறை தேவை என்றும் ஒக்ஸ்போர்டு எகனாமிக்ஸ் கூறுகிறது.

இந்த ஆண்டின் நான்காவது காலாண்டில் திட்டமிடப்பட்ட ஜனாதிபதித் தேர்தல் நடைபெற வேண்டிய நிலைமை உள்ளமை மற்றும் சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தும் திட்டத்தின் விதிமுறைகள் - குறிப்பாக நிர்வாக சீர்திருத்தங்கள் மற்றும் நிதி ஒருங்கிணைப்பு ஆகியவை - பொருளாதாரத்துக்கு சவாலானவையாக இருக்கும் என்றும் ஒக்ஸ்போர்டு எகனாமிக்ஸ் தெரிவித்துள்ளது.

2025 ஆம் ஆண்டளவில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, கொவிட் தொற்றுநோய்க்கு முந்தைய நிலையை எட்டும் என்றும், 2024 இல் 1.5 வீத பொருளாதார வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் அந்த நிறுவனம் கூறியுள்ளது.

அப்படி ஒரு நிலைமையை இவ்வாண்டில் எட்டினால் கூட, அது பொருளாதாரம் சீரடைந்து விட்டது என்ற திருப்தி நிலைமை அல்ல என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

# ஆப்கானில் பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்கள் கல்லெறிந்து கொல்லப்படுவர்



பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்களுக்கு எதிராக, கடும் செயற்பாடுகளை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக தலிபான் தெரிவித்துள்ளது.

அவர்கள் பொது இடங்களில் கல்லெறிந்து கொல்லப்படுவர் என தலிபான்களின் அதி உயர் மட்ட தலைவர் முல்லா ஹிபத்துல்லா அகுந்தசாதா தெரிவித்துள்ளார்.

தற்போது பெண்கள் பாலியல் தொழிலில் அதிக அளவில் ஈடுபடுகின்றனர் எனவும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

கடந்த 2021 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகள் வெளியேறின. அதன் பின்னர் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றினர். இஸ்லாமியர்களின் ஷரியத் சட்டத்தின்படியே ஆட்சி என்று அறிவித்தனர்.

அதேவேளையில், கடந்த முறையைப் போல் ஆட்சி இருக்காது. பெண் கல்வி, பெண் சுதந்திரம் பேணப்படும், உலக நாடுகளுடன் நட்புறவு ஏற்படுத்தப்படும் என்று உறுதியளித்தனர். ஆனால், தலிபான்களின் ஆட்சி அவ்வாறாக நடைபெறவில்லை. அங்கு தற்போது வறுமையும், பசியும், நோயும் மட்டுமே மிஞ்சியுள்ளது.

இந்த நிலையில், அரசு தொலைக்காட்சியில் தலிபான் முல்லா ஹிபத்துல்லா அகுந்தசாதா வெளியிட்ட அறிவிப்பில், பெண்களுக்கு பொது இடத்தில் வைத்து கசையடி, கல்லடி வழங்கும் நடைமுறை மீண்டும் அமலுக்கு வரும் எனக் கூறியுள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“சர்வதேச சமூகம் ஆப்கன் பெண்களின் உரிமைகள் பற்றி பேசி வருகின்றன. அது ஷாரியத் சட்டத்துக்கு எதிரானது. பெண்களைக் கல்லால் அடித்துக் கொன்றால் அது பெண் உரிமைக்கு எதிரானது என நீங்கள் கூறுகிறீர்கள். ஆனால், விரைவில் நாங்கள் அதை நடைமுறைப்படுத்தப் போகிறோம். திருமணத்தை மீறிய உறவில் ஈடுபடும் பெண்களை நாங்கள் கல்லால் அடித்தும், கசையடி கொடுத்தும் கொல்லும் நடைமுறையைக் கொண்டு வரப் போகிறோம்.

பொதுமக்கள் முன்னிலையில் இந்தத் தண்டனை நிறைவேற்றப்படும். காபூலைக் கைப்பற்றியதோடு தலிபான்களின் வேலை முடிந்துவிடவில்லை. இப்போதுதான் அது தொடங்கியுள்ளது.” – என்றார்.

# விமானத் தளங்களை இலக்குவைக்கும் ரஷ்யா





ரஷ்யாவின் தற்போதைய இலக்கு, எப் -16 போர்விமானங்களுக்கு ஏதுவாக காணப்படுகின்ற விமானத்தளங்களே என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

அண்மையில், மொஸ்கோவின் வடமேற்கே உள்ள டோர்ஷோக் பகுதியில் உள்ள விமானப்படை விமானிகளிடம் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் பேசிய போதே மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், “நேட்டோ கூட்டமைப்பு நாடுகளின் எல்லையை நோக்கி ரஷ்யா நகரவில்லை. மாறாக, அவர்கள் தான் நம்மை நெருங்கி வருகிறார்கள், எனவே மக்களை பாதுகாப்பதற்காகவே ரஷ்யா இந்த சிறப்பு ராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

உக்ரைன் தனது மேற்கத்திய நாடுகளிடம் இருந்து ரஷ்யா மீது ராணுவ அழுத்தத்தை அதிகரிக்கும் வகையில் எப் -16 போர்விமானங்களின் விநியோகத்திற்காக காத்திருக்கிறது.

இந்நிலையில், கடந்த ஆண்டும் உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி 42, எப் -16 விமானங்கள் உறுதி செய்யப்பட்டதாகக் கூறியிருந்தார்.

தவிரவும், அவற்றை எவ்வாறு இயக்குவது என்பது குறித்து உக்ரைன் விமானிகள் பல மாதங்களாக மேற்கு நாடுகளில் பயிற்சி பெற்று வருகின்றனர் என கூறப்படுகிறது.

எப் -16 விமானங்கள் தரையில் இருக்கும் போது குண்டுவீச்சு தாக்குதல்களில் இருந்து பாதுகாக்க உயர்தர ஓடுபாதைகள் மற்றும் வலுவூட்டப்பட்ட ஹேங்கர்கள் தேவை.

உக்ரைரைனிலுள்ள விமானத்தளங்களில் எத்தனைக்கு அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும் என்பது தெளிவாகத் தெரியவில்லை, ஆனால் அந்த எப் -16 போர் விமானங்கள் உக்ரைனுக்கு வந்தால் அது உடனடியாக தாக்கி அழிக்கப்படும்.” – என எச்சரித்துள்ளார்.

# சமூக நீதிக்கு எதிரான பா.ஜ.கவுடன் ராமதாஸ் கைகோத்த மர்மம் என்ன?

## தருமபுரி கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் கேள்வி




"சமூக நீதி பேசும் மருத்துவர் ராமதாஸ், சமூக நீதிக்கு எதிரான பா.ஜ.கவுடன் கைகோத்த மர்மம் என்ன? பா.ம.க. வலியுறுத்தும் ஒரு கொள்கைக்குக் கூட ஆதரவு தெரிவிக்காத, அதற்கு முற்றிலும் நேர் எதிரான கொள்கை கொண்டதுதான் பா.ஜ.க. இது, மூத்த தலைவரான உங்களுக்குத் தெரியாதா?"

– இவ்வாறு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், தருமபுரி மாவட்டம், தடங்கம் பகுதியில் நேற்று நடைபெற்ற இண்டியா கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பரப்புரைப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றினார். இதன்போது அவர் மேலும் உரையாற்றுகையில்,

"இந்தியாவில் சமூக நீதி நீடிக்க வேண்டும் என்றால், ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றால், வேற்றுமையில் ஒற்றுமை தொடர வேண்டும் என்றால், எங்கும் சமத்துவம் தழைக்க வேண்டும் என்றால், அரசியல் சட்டம் காப்பாற்றப்பட வேண்டும் என்றால், நம் நாட்டின் பன்முகத்தன்மையைப் பறைசாற்றும் இந்திய தேசியக் கொடி கம்பீரமாக டெல்லி செங்கோட்டையில் பறக்க வேண்டும் என்றால், முதலில் பா.ஜ.க. ஆட்சியை வீட்டுக்கு அனுப்ப வேண்டும். இண்டியா கூட்டணியை ஆட்சியில் அமர்த்த வேண்டும்.

பா.ஜ.க. என்பது சமூக நீதிக்குச் சவக்குழி தோண்டும் கட்சி. சமத்துவம் என்றால், கிலோ என்ன விலை என்று கேட்கும் கட்சி. நம்முடைய நாட்டை மத, இன, சாதி, மொழி அடிப்படையில் பிளவுபடுத்திக் குளிர்காய வேண்டும் என்று நினைக்கும் கட்சிதான் பா.ஜ.க. அப்படிப்பட்ட, பா.ஜ.கவை மீண்டும் ஆட்சிக்கு வரவிடாமல் தடுக்கும் கடமை, சமூக நீதி மண்ணான தமிழ்நாட்டுக்குத்தான் அதிகம் உண்டு.ஆனால், நான் பெரிதும் மதிக்கும் சமூக நீதி பேசும் வைத்தியர் ராமதாஸ் எங்கே இருக்கிறார் என்று உங்களுக்குத் தெரியும்.

சமூக நீதிக்கு எதிரான பா.ஜ.கவுடன் சமூகநீதி பேசும் ராமதாஸ் எப்படி கூட்டணி வைத்தார் என்பது, ஏதோ தங்கமலை இரகசியமெல்லாம் கிடையாது. இந்த தருமபுரி மக்களுக்கு நன்றாகவே தெரியும். அவர் ஏன் மனதில்லாமல் அங்குச் சென்றிருக்கிறார் என்று உங்களுக்கு மட்டுமல்ல, அவர்கள் கட்சியினருக்கும் தெளிவாகத் தெரியும். இதற்குமேல் நான் விளக்கமாகச் சொல்ல விரும்பவில்லை.

மத்திய அரசு சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும். ஒட்டுமொத்தமாகப் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின, பழங்குடியின மக்களின் சமூக நீதியைக் காப்பாற்றும் அரசை மத்தியில் அமைக்க வேண்டும் என்று இண்டியா கூட்டணியை வலுவாக அமைத்திருக்கிறோம். அந்த வகையில், இண்டியா கூட்டணி, மக்களின் நலனுக்காக, மக்களுக்காகவே பாடுபடும் கட்சிகளின் கூட்டணியாக கம்பீரமாக உங்களுக்காகக் களத்தில் போராடுகிறோம்." – என்றார்.

# ஏழைகளுக்கானது தி.மு.க. அரசு ஈரோடு பிரச்சாரத்தில் கமல் பேச்சு





"தி.மு.க. அரசு ஏழைகளுக்கான அரசு என்பதை நான் உணர்கிறேன். அது இன்னும் சிறப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஆதரிக்கிறோம். தேர்தலில் போட்டியிடாமல் தியாகம் செய்து விட்டீர்களே என்று என்னிடம் கேட்கின்றனர். இது தியாகம் அல்ல, தமிழ்நாட்டின் வியூகம்."

– இவ்வாறு மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் உரையாற்றியுள்ளார்.

தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் ஈரோட்டில் நேற்று தனது பிரச்சாரத்தை தொடங்கினார்.

ஈரோடு மக்களவைத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் பிரகாஷை ஆதரித்து, வீரப்பன்சத்திரம் பகுதியில் கமல்ஹாசன் உரையாற்றுகையில்,

"நாட்டை காப்பாற்ற கட்சி வரைகோடுகளை அழித்து விட்டு மக்கள் நீதி மய்யத்தினர் இங்கு வந்துள்ளனர்.

ஈரோட்டில் நான் பிரச்சாரத்தைத் தொடங்க இரண்டு காரணங்கள் உண்டு. பெரியார் முதல் காரணம். ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலின் போது நீங்கள் காட்டிய அன்பு இரண்டாவது காரணம். தேர்தலில் போட்டியிடாமல் தியாகம் செய்து விட்டீர்களே என்று என்னிடம் கேட்கின்றனர். இது தியாகம் அல்ல, தமிழ்நாட்டின் வியூகம்.

தமிழகத்தின் வளர்ச்சி என்பது பல தலைவர்கள் போட்ட அடித்தளம். மதிய உணவுத் திட்டம் என்பது காமராஜர் தொடங்கி எம்.ஜி.ஆர். அதைத் தொடர்ந்து இன்று அதன் நீட்சியாக காலை உணவுத் திட்டமாக தமிழக முதல்வரால் நிறைவேற்றப்படுகிறது. இதற்கெல்லாம் உரிமையை யாரோ மையத்தில் இருந்து கொண்டாட முடியாது. அப்படி கொண்டாடவேண்டுமானால், இங்குள்ள மையத்திற்கு வாருங்கள்.

கறுப்பு பண முதலைகளை ஒழிப்போம் என்று சொன்னவர்கள், மீன்களைப் போன்ற மக்களைக் கொன்று விட்டனர். இங்குள்ள அரசு செயல்படுத்தும் காலை உணவுத்திட்டம், மகளிர் உரிமைத்தொகை போன்ற நலத்திட்டங்களை வடநாட்டில் ஏன் செயல்படுத்தவில்லை. 29 பைசாவை வைத்து நாங்கள் இதை செய்யும் போது, 7 ரூபாய் வைத்து ஏன் பீஹாரில் செய்ய முடியவில்லை. எங்களுக்கு வழங்கும் 29 சைவை எப்படி 20 பைசா ஆக்கலாம் என்று யோசிக்காதீர்கள்.

தி.மு.க. அரசு ஏழைகளுக்கான அரசு என்பதை நான் உணர்கிறேன். அது இன்னும் சிறப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஆதரிக்கிறோம். நம் மீது கை வைப்பவர்களை எதிர்க்க ஒரு விரல் மை போதும். எங்களின் குரல் நியாயத்திற்காக ஒலித்துக் கொண்டு இருக்கும். அது எந்த கட்சி செய்தலும் அதை பாராட்ட தயக்கம் இல்லை. ஏன் செய்யவில்லை என்று கேட்போம், இன்னும் செய்யுங்கள் என்று சொல்லுவோம்." – என்றார்.

# புதிய மின்சாரச் சட்டமூலம் 2 வாரங்களில் வெளியாகும்

## வர்த்தமானியில் பிரசுரமாகும் என்கிறார் அமைச்சர் கஞ்சன விஜேசேகர



மின்சார சபையை மறுசீரமைப்பதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்கிய புதிய மின்சார சட்டமூலம் அடுத்த இரண்டு வாரங்களில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, ஏப்ரல் இறுதி வாரத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர குறிப்பிட்டுள்ளார்.

மின்சார சபையின் மறுசீரமைப்பு தொடர்பிலான முன்னேற்றத்தை ஆராயும் மீளாய்வுக் கூட்டத்தின் போது இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது என்று அமைச்சர் கஞ்சன தனது எக்ஸ் வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

சட்டமூலத்தை மீளாய்வு செய்த பின்னர், அதனை நடைமுறைப்படுத்துவதற்கான உறுதிப்பாடு கடந்த திங்கள் கிழமை சட்டமா அதிபரால் வழங்கப்பட்டது.

அதனடிப்படையில், வர்த்தமானி பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் எந்தவொரு நபருக்கும் மீளாய்வு செய்வதற்கு குறைந்தபட்சம் இரண்டு வாரங்கள் அவகாசம் வழங்கப்படும் என அவர் தனது பதிவில் பதிவிட்டுள்ளார்.




# கரையோர மார்க்கத்தில் ரயில்கள் தாமதமாகலாம்

கரையோர மார்க்கத்தில் ரயில் சேவைகள் தாமதமாகக்கூடும் என ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வெள்ளவத்தை மற்றும் கொழும்பு கோட்டை ரயில் நிலையங்களுக்கு இடையே முன்னெடுக்கப்படும் பராமரிப்பு பணிகள் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

காலி நோக்கி பயணிக்கும் தடத்தில் இந்த பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதன் காரணமாக ரயில் பயணிகள் நேற்று கடும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்திருந்தனர்.

# சிறுவர்களுக்கு வைரஸ் காய்ச்சல்: சுகாதாரத் தரப்பினர் எச்சரிக்கை



சிறுவர்களிடையே பரவும் வைரஸ் காய்ச்சல் தொடர்பில் சுகாதார தரப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

12 வயதிற்கு குறைந்த சிறுவர்கள் இந்த நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகின்றனர் எனக் கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த நோய்த் தாக்கத்திற்கு உள்ளான சிறுவர்களின் முகம் மற்றும் கைகளில் சிறிய கொப்புளங்கள் ஏற்படலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நோயின் தாக்கம் மேல் மாகாணத்திலேயே அதிக அளவில் அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் நோய்த் தாக்கத்திற்கு உள்ளான சிறுவர்களுக்கு உணவில் சுவை உணர முடியாத நிலை காணப்படலாம் எனவும் அவர்கள் தொடர்ச்சியாக அழக்கூடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வைரஸ் நோய்க்கான அறிகுறிகளைக் கொண்டுள்ள சிறுவர்களை மூன்று அல்லது நான்கு நாள்கள் வீட்டிலேயே தங்கவைக்க வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இந்த வைரஸ் நோய்த் தாக்கத்திற்கு உள்ளான சிறுவர்களை பாடசாலைக்கு அனுப்ப வேண்டாமெனவும், அவர்களை சுத்தமாக வைத்திருக்குமாறும் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா கேட்டுக்கொண்டுள்ளார்.




**1. உரலார் கேள்வி :- உலகத்தின் மகிழ்ச்சியான நாடு எது என்ற தேர்வில் ஏழாவது ஆண்டாக வும் பின்லாந்து முதலிடம் பிடித்திருப்பது பற்றிக் கேள்விப்பட்டீர்களா?**



**உலக்கையார் பதில் :-** கேள்விப்பட்டேன். அந்த நாட்டு மக்கள் கொடுத்து வைத்தவர்கள். இனி அந்த நாட்டிற்கு பின்லாந்து என்ற பெயரை மாற்றி 'முன்லாந்து' என்றோ 'வின்லாந்து' என்றோ புதிய பெயர் வைத்து விடலாம் போல.

**சல்லடையார் சலிப்பு :- எனக்குப் பதிலா இந்த முறை வாரிதியாரே பகிடி விடத் தொடங்கீட்டார்.**

✦✦✦✦✦✦✦✦✦✦

**2. உரலார் கேள்வி :- கனடா சென்ற தமிழர்கள் கஷ்டப்படுகிறார்களாமே?**

**உலக்கையார் பதில் :-** 'பாவியார் சென்ற இடமெல்லாம் பள்ளமும் திட்டியும் தான்' என்று சும்மாவா சொன்னார்கள். ஆசை அதிகரித்து அவர்களாகத் தேடிக் கொண்ட துன்பம் இது. ஏன் அந்தக் கஷ்டத்துக்குள் இருக்க வேண்டும். அவர்களை வரவேற்கத் தாய்நாடு எப்போதும் தயாராக இருக்கிறது. கஞ்சியோ, கூழோ உறவுக ளோடு கூடியிருந்து குடித்து மகிழலாம். வருகவே! வருகவே!

**சல்லடையார் சலிப்பு :-**
**'சொர்க்கமே என்றாலும் அது நம்மூரைப் போல ஆகுமா?'**

✦✦✦✦✦✦✦✦✦✦

**3. உரலார் கேள்வி :- சுமந்திரன், சிறீதரன் பிரச்சினையில் தலையிடக் கம்பன் கழகத்திற்கு யார் உரிமை தந்தார்கள்?**

**உலக்கையார் பதில் :-** சமூகத்தில் பிழைகள் நிகழ்ந்தால் அதனைத் தலைவர்கள் தீர்த்து வைக்க முயல வேண்டும். தலைவர்களுக்குள் பிழைகள் நேரத் தொடங்கினால் அதனைச் சமூகம் தீர்த்து வைக்க முன்வர வேண்டும். அங்ஙனம் பிழைகள் நிகழும் போது சமூகம் வெறுமனே கை கட்டி நிற் பதோ அல்லது வீண் கதைகள் பேசுவதோ பொருத் தமான ஒன்றல்ல என்பது எனது அபிப்பிராயம்.

தற்போது தமிழரசுக்கட்சிக்குள் நிகழ்ந்திருப்பது, கட்சியையே அழிக்கக் கூடியதான ஒரு பெரிய ஆபத்து. காலம் கடத்தாது அப்பிரச்சினையை உடனடியாக யாரேனும் தீர்த்து வைக்க வேண்டும். அங்ஙனம் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான முதலுரிமை, கட்சியின் மூத்த உறுப்பினருக்குரியது. ஆனால் அத்தகையவர்கள்தான் இப் பிரச்சினையை வளர்த்துக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள்.



அவர்களுக்கு அடுத்ததாய் இப் பிரச்சினையில் தலையிட்டுத் தீர்வுகாண வேண்டியவர்கள் கட்சியின் முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள். அவர்களும் அணிபிரிந்து நின்று பிரச்சினைத் தீக்கு நெய் வார்ப்பதாகவே தெரிகிறது. அவர்களில் பலருக்கும் கட்சி பற்றியோ, இனம் பற்றியோ பெரிய கவலை இருப்பதாகத் தெரியவில்லை. இன்னும் சொல்லப்போனால் கட்சி பலவீனப்பட்டால்தான் தாங்கள் வாழ்வு பெறலாம் என்ற எண்ணம் அவர்களுக்கு இருப்பதாய்த் தெரிகிறது.

இவர்களையும் விட்டால் கட்சியை நெறிப்படுத்தும் குழுக்களின் உறுப்பினர்கள் இவ்விடயத்தில் தலையிட வேண்டும். அவர்கள் பெரும்பாலும் கையாளப்படுகிறவர்களாய் இருக்கிறார்களே தவிர

**(13ஆம் பக்கம் பார்க்க)**

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

கையாளும் திறமையுள்ளவராக இல்லைப்போல் தோன்றுகிறது..

இந்நிலையில் கட்சியின் இப் பிரச்சினையைத் தீர்க்க சமூகத்தவர்கள்தான் முன்வர வேண்டும். அப்படிப் பார்த்தால் பல்கலைக்கழகச் சமூகம், பிரஜைகள் குழு, மதத்தலைவர்கள் அமைப்பு என்பவை இப் பிரச்சினையில் இதுவரை தலையிட்டிருக்க வேண்டும். இவர்களையும் விட்டால் இப் பிரச்சினைத் தீர்வில் முகங்கொடுக்க இலக்கிய அமைப்புக்களும், சமூக அமைப்புக்களும் முன்வரலாம் என்பது எனது அபிப்பிராயம்.

மேற்சொன்னவர்களுள் ஒரு சில மதத்தலைவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண முயன்றனர் எனச் சொல்லப்படுகிறது. ஆனால் அம் முயற்சியும் ஏனோ இடையில் நின்றுபோய் விட்டதாம். அதனால் தான் இப் பிரச்சினைத் தீர்வுக்கு எங்களால் ஏதாவது செய்ய முடியுமா? என நாங்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்.

**சல்லடையார் சலிப்பு :-**
**நம்ம ஆக்கள் செய்யவும் மாட்டாங்கள், செய்ய விடவும் மாட்டாங்கள்.**

✦✦✦✦✦✦✦✦✦✦

**4. உரலார் கேள்வி :- சுமந்திரன், சிறீதரன் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டமொன்றை முன் வையுங்கள் பார்க்கலாம்.**

**உலக்கையார் பதில் :-** நீங்கள் கிண்டலாய்க் கேட்கிறீர்கள் என்று தெரிகிறது. ஆனாலும் என் அறிவுக்குப்பட்ட வகையில் கீழ்க்கண்டவாறு ஒரு திட்டத்தினை முன் வைக்கலாமோ என்று தோன்றுகிறது.

மூன்று நிலைகளில் இத்தீர்வுத் திட்டத்தை உருவாக்க வேண்டும் எனக் கருதுகிறேன்.

1. தலைவர்கள் இருவரும் பழையவை மறந்து ஒன்றுபட்டுச் செயற்பட முடிவெடுத்தல்.

2. நீதிமன்றப் பிரச்சினையை முடித்து வைத்து, கட்சியை மீட்டெடுத்தல்.

3.முடிந்தவரை உறுப்பினர்களை ஒன்றுபடுத்தி, ஒருமித்த முடிவோடு மீண்டும் புதிய நிர்வாகத்தை உருவாக்குதல்.

இம் மூன்று விடயங்களும் உடன் செய்யப்பட வேண்டியவை. தொடர்ந்து தலைவர்கள் இருவரும் கீழ்க்கண்ட விடயங்களை ஓர் தளமாக வைத்து, மேலும் மற்றவர்களின் ஆலோசனைகளையும் உள்வாங்கி, ஒன்றுபட்டு இயங்குவதற்கான புதிய வேலைத்திட்ட அட்டவணை ஒன்றைப் பின்வருமாறு அமைக்கலாம்.

1. நடந்த கசப்பான சம்பவங்கள் அனைத்தையும் மறந்து, சந்தேகத்திற்கு இடமில்லாமல் உண்மையாக, திறந்த மனதுடன் இணைந்து செயற்பட முடிவெடுத்தல்.

2. தலைமையை வெளிவிவகாரம், உள்விவகாரம் என இரண்டாகப் பிரித்துக் கொள்ளுதல்.

3. அப்பதவிக்கு ‘இணைத் தலைமை’ எனப் பெயரிட்டு, இந் நடவடிக்கையைக் கட்சி யாப்புக்குள் உள்வாங்கி முறைப்படி செயல்படுத்த வழிவகை செய்தல் .

4. வெளிவிவகாரம் சம்பந்தமாக எடுக்கப்படும் முடிவுகளையும், உள்விவகாரம் சம்பந்தமாக எடுக்கப்படும் முடிவுகளையும் இரு தலைவர்களும் ஒருவருக்கொருவர் ஒளிவுமறைவின்றி, முழுமையாக வெளிப்படுத்தி உடன்பட்டுச் செயலாற்றுதல்.

5. செயலாளர் பதவியை வழமைபோலக் கிழக்கு மாகாணத்திற்குக் கொடுத்தல்.

6. அப் பதவி வழங்கலில், இணைத் தலைவர்கள் மன வேற்றுமையின்றி ஒருமைப்பாட்டுடன் செயற்படுதல்.

7. அவ்விடயத்தில் கருத்து முரண்பாடுகள் ஏற்படும் பட்சத்தில் கட்சியின் மூத்த உறுப்பினர்களின் ஆலோசனைகளைப் பெற்றுச் செயல்படுதல்.

8. கட்சியின் நிர்வாகக்குழுக்களின் உறுப்பினர்களை இரு தலைவர்களும், தத்தம் ஆதரவாளர்களிலிருந்து சரி சமமாகத் தேர்ந்தெடுத்தபின் மூவரை மட்டும் பக்கச் சார்பற்ற நடு நிலையாளர்களிலிருந்து நியமித்தல்.

9. சந்திப்புக்கள், முடிவுகள், பத்திரிகையறிக்கைகள், சட்ட நடவடிக்கைகள், கணக்கறிக்கைகள், நிதிக் கையாளுகை போன்ற விடயங்களில், இரு தலைவர்களினதும் ஒருமித்த முடிவும் பரஸ்பர அங்கீகாரமும் இருத்தல்.

10. கட்சியின் நிர்வாக விரிவாக்கல் முயற்சிகளில் இரு தலைவர்களும் உடன்பட்டுச் செயற்படுதல்.

11. இரு தலைவர்களும் தத்தமது ஆதரவாளர்களைக் கட்சிக்காகப் பொதுமைப் படுத்தல்.

12. தலைவர்கள் தத்தமக்கெனக் கொண்டிருக்கும் கொள்கைகளைத் தனித்தனி பேணுவது எனவும், அக் கொள்கைகளைக் கட்சியின் கொள்கையாய் ஆக்குதல் கூடாது எனவும் முடிவெடுத்துச் செயற்படுதல்.

13. கட்சிக்கான கொள்கைகளை வகுக்கும்போது மற்றைய உறுப்பினர்களின் கருத்துக்களையும் பெற்று இரு தலைவர்களும் ஒருமித்துச் செயலாற்றுதல்.

14. புலம்பெயர் அமைப்புகளைக் கையாளுதல், தேர்தல்களில் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்தல், பிற நாட்டுத் தலைவர்களுடன் தொடர்பு கொள்ளுதல், தமிழ்பேசும் ஏனைய சிறுபான்மைக் குழுக்களுடன் இணக்கப்பாடு ஏற்படுத்தல் போன்ற விடயங்களில் இரு தலைவர்களும் ஒன்றுபட்டுச் செயலாற்றுதல்.

15. இவ்விடயங்களில் முடிவுகளை எடுக்கும் முன், தீர்க்கதரிசனமும், அறிவாற்றலும், இனப்பற்றும் உள்ள அறிஞர் குழுக்களை நியமித்து அவர்தம் ஆலோசனைகளைப் பெறுதல்.

இரு தலைவர்களும் மேற்படி முடிவுகளுக்கு உடன்பட்டபின் கட்சிக்குள் தத்தமது தலைமையை உறுதிப்படுத்தும் இரகசிய செயற்பாடுகளில் ஈடுபடாமல் இருத்தல் அவசியம்.

முடிந்தவரை முரண்பாடுகளைப் பேசித்தீர்த்தபடி அரசியல் பயணத்தை இவர்கள் முன்னெடுக்க முடிவு செய்தல் வேண்டும்.

இவ் விருவரில் ஒருவர் தமது செயல்பாட்டில் வஞ்சனையைக் கலக்க முற்பட்டால், பழையபடி கட்சியின் உடைவு உறுதிப்படுத்தப்பட்டு விடும். ஆதலால், மேற்படி கருத்துக்களை மனம் கொண்டு, செயல்பட வேண்டும்.

இவற்றை நடைமுறைப்படுத்தலில் உள்ள சிரமத்தை அறிகிறேன். ஆனாலும் கட்சி உருப்பட வேண்டுமானால் இதைத் தவிர வேறு வழிகள் இருப்பதாய்த் தெரியவில்லை.

**சல்லடையார் சலிப்பு :-**
**‘ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு- ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வு’.**

✦✦✦✦✦✦✦✦✦✦





# வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் நடமாடும் சேவை

**(கே.வசந்தன்)**

'நானே ஆரம்பம் வெல்வோம் ஸ்ரீலங்கா – சிமாட் சூரன்களோடு' எனும் தொனிப்பொருளிலான தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் நடமாடும் சேவை வவுனியா காமினி மகாவித்தியாலய விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்றது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புகள், வெளிநாடுகளில் பணிபுரிவோரின் முறைப்பாடுகளைப் பொறுப்பேற்றல், தொழில் வங்கியில் பதிவு செய்தல், வெளிநாடுகளில் பணிபுரிவோருக்கு உரிய நட்டஈடு – சம்பளம் – காப்புறுதி தொடர்பான சேவைகள், ஈ.ரி.எவ். தொடர்பான சேவைகள், தொழிற்றுறை பாடநெறிகள் தொடர்பான பதிவு, தொழில் முனைவாளர்களுக்கு அபி விருத்தி மேம்பாட்டு பயிற்சிகளுக்கான பதிவு, உத்தேச தொழில்வாய்ப்புகள் சட்டம் தொடர்பான விழிப்புணர்வு, வெளி நாடுகளில் பணிபுரிவோரின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கல் போன்ற பல சேவைகள் இந்த நடமாடும் சேவையூடாக முன்னெடுக் கப்பட்டது.

அத்துடன் ருமேனியா, மத்திய கிழக்கு நாடுகள், இஸ்ரேல், ஐரோப்பா நாடுகளில் தொழில் ஒன்றை பெற்றுக் கொள்வது தொடர்பாக முகவர் நிறுவனங்களால் தெளிவூட்டல்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார பிரதம அதிதியாகக் கலந்துகொண்டதுடன், அதிதிகளாக

**(11ஆம் பக்கம் பார்க்க)**
























# வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் நடமாடும் சேவை

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் கே.காதர் மஸ்தான், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான குலசிங்கம் திலீபன், ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னித் தேர்தல் தொகுதி அமைப்பாளர் ம.மயூரதன், வவுனியா மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, பிரதேச செயலாளர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அதிகாரிகள், அரச மற்றும் அரசார் பற்ற நிறுவனங்களின் பிரதிநிதி கள், மாணவர்கள், பொதுமக்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

நடமாடும்சேவையில்முன்னெடுக்கப் படும் சேவைகளை நேரில் சென்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார பார்வையிட்டமையுடன் வெளிநாடுகளில் பணிபுரிவோரின் பிள்ளைகளுக்குப் பாடசாலை உபகரணங்களையும் வழங்கி வைத்தார்.

இந்த நடமாடும் சேவை வவுனியா காமினி மகா வித்தியாலயத்தில் இன்றும் காலை 9.45 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை முன்னெடுக்கப்படவுள் ளமை குறிப்பிடத்தக்கது.



















### யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின்

# மருத்துவக் கழிவுகளை எரிப்பதற்கான எரியூட்டி கோம்பயன்மணல் இந்து மயானத்தில் திறப்பு!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மருத்துவக் கழிவுகளை எரியூட்டுவதற்காகக் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் உருவாக்கப்பட்ட எரியூட்டி நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 4 கோடி ரூபா நிதி பங்களிப்பில் அமைக்கப்பட்ட குறித்த எரியூட்டி கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் திறந்து வைக்கப்பட்டது

யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவக் கழிவுகளை எரியூட்டுவதில் கடந்த காலங்களில் பல்வேறு சர்ச்சைகள் எழுந்த நிலையில் எரியூட்டியை அமைப்பதற்கான இடத்தைத் தேர்வு செய்வதில் இழுபறி காணப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் தீர்மானத்துக்கமைய யாழ். மாநகர சபை, கோம்பயன்மணல் இந்து மயான சபை என்பவற்றின் அனுமதியுடன் எரியூட்டி அமைக்கப்பட்டது.

















# இன்றைய ராசி பலன்கள் - 30.03.2024

## மேஷம்

உங்கள் மனதில் எதிர்மறை எண்ணங்கள் எழக்கூடிய சூழ்நிலைகள் உருவாகும். இன்று உங்களின் வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்தும். உங்களை உற்சாகப் படுத்திக் கொண்டு நம்பிக்கையோடு இருக்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். அதனைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். உடல் நலக் குறைபாடு காரணமாக பணிகளை விரைந்து முடிக்க இயலாது.

நீங்கள் உங்கள் துணையுடன் இன்று வன்மையாக நடந்து கொள்வீர்கள். இதனால் உறவில் சில பாதிப்புகள் ஏற்படும். எனவே அத்தகைய உணர்வை தவிர்க்கவும்.

இன்று நிதிநிலைமை உங்களுக்கு சாதகமாக இருக்காது.

## ரிஷபம்

இன்று நம்பிக்கையான நாள். நீங்கள் பயனுள்ள முடிவுகளை எடுக்கும் நாள். இன்று நடக்கும் சம்பவங்கள் உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

பணியிடத்தில் சுமூகமான பலன் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் சமநிலையான உணர்வுடன் நடந்து கொள்வீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் வளரும்.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். இன்று நீங்கள் சிறிது பணத்தை சேமிப்பீர்கள். உங்கள் மனதில் காணப்படும் திருப்தி உணர்வு காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மிதுனம்

உறுதியான அணுகுமுறை இருந்தால் இன்று நீங்கள் நல்ல பலன்களைக் காணலாம். நீங்கள் வெற்றி பெறத் தகுதியானவர் என்று நீங்கள் உறுதியாக நம்ப வேண்டும். அதன்படி நீங்கள் உங்கள் இலக்குகளை அடைய முயற்சி செய்ய வேண்டும். இதன் மூலம் வளம் பெருகும்

உங்கள் பணியின் செயல்திறனுக்கான பாராட்டைப் பெறுவீர்கள். உங்கள் தனிப்பட்ட திறமைகள் மற்றும் ஆற்றலை வெளிப்படுத்தி பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையிடத்தில் நட்பான அணுகுமுறை கொள்வீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி நிலவும்.

நிதிநிலைமை இன்று திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு நிலையை அதிகரிக்கும் வாய்ப்பு கிடைக்கும்.

## கடகம்

இன்று உங்களுக்கு தேவையில்லாத மனக் குழப்பங்கள் ஏற்படும். அத்தகைய உணர்வுகளை தவிர்த்து நம்பிக்கையோடு செயல்பட வேண்டும்.

உங்கள் பணிகளை காலம் தாழ்த்தி செய்ய நேரலாம். தவறுகள் நேராமல் இருக்க பணிகளை கவனமுடன் மேற்கொள்ள வேண்டும்.

இன்று உங்கள் மனதில் குழப்பங்கள் காணப்படும். அதனால் உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான மனநிலையில் பழக இயலாத நிலை இருக்கும். மகிழ்ச்சியாக இருக்க உங்கள் மனதை தெளிவாக வைத்திருக்க வேண்டியது அவசியம்.

இன்று நிதிநிலைமை முன்னேற்றகரமாக இருக்காது. இன்று பண இழப்பும் அதனால் ஏமாற்ற உணர்வும் ஏற்படலாம்.

## சிம்மம்

இன்று பலன்கள் கலந்து காணப்படும். உங்கள் இலக்குகளை அடைவதில் சில தடைகள் காணப்படும். உங்கள் திறமை மூலம் சமாளித்து இலக்கை அடைவீர்கள்.

பணியிடத்தில் பணியில் மும்மரமாக காணப்படுவீர்கள். பணிகளை மேற்கொள்ளும்போது சவால்களை சந்திக்க நேரலாம். எனவே பணிகளை கவனமாக கையாள வேண்டும்.

கருத்து வேறுபாடு மற்றும் தவறான புரிந்துணர்வு காரணமாக நீங்கள் உங்கள் துணையை தவறாக புரிந்து கொள்ள நேரலாம். இதனால் ஆரோக்கியமான உறவை தக்க வைத்துக்கொள்வது கடினம்.

இன்று பணப்புழக்கம் ஏமாற்றகரமாக இருக்கும். போதிய அளவு பணம் சம்பாதிப்பதில் சில தடைகள் காணப்படும்.

## கன்னி

இன்று உங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கு சாதகமான நாள். கடின உழைப்பும் உறுதியும் இன்று உங்களுக்கு வெற்றியை அளிக்கும். இன்று முழுவதும் நீங்கள் புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

கடினமான பணிகளையும் எளிதாக ஆற்றுவீர்கள். பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது.

நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாகவும் உண்மையாகவும் நடந்து கொள்வீர்கள். உங்களின் இந்தப் போக்கின் காரணமாக நீங்கள் அவரை நன்கு புரிந்து கொள்ளலாம்.

நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். பங்கு வர்த்தகத்தில் முதலீடு செய்வீர்கள். அது உங்களுக்கு லாபகரமாக இருக்கும்.

## துலாம்

இன்று உங்களுக்கு விருப்பமான பலன்கள் கிடைக்காது. எந்த செயலையும் தொடங்குவதற்கு முன் அதன் விளைவை நன்றாக யோசிக்க வேண்டும். பிறருடன் பேசும் போது பாதகமான விளைவுகள் ஏற்படாமல் இருக்க வார்த்தைகளை கவனமாகப் பிரயோகிக்க வேண்டும்.

உங்கள் பணிகளை ஆற்றும்போது சில ஏமாற்றங்களும் தடைகளும் காணப்படும். உங்கள் சக பணியாளர்களுடனான தகவல் பரிமாற்றமும் திருப்திகரமாக இருக்காது. நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். உணர்ச்சிவசப்படாமல் இருந்தால் இன்று நீங்கள் அமைதியாக இருக்கலாம். இன்று தவிர்க்க முடியாத செலவுகள் காணப்படும்.

## விருச்சிகம்

இன்று விருப்பமான பலன்கள் கிடைக்காது. உங்கள் அன்றாட செயல்களை திறம்பட செயல்வதை கடினமாக உணர்வீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும். அமைதியாக இருக்கவும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. என்றாலும் உன்னிப்பாக கவனித்து பணியாற்றினால் தவறுகளை தவிர்க்கலாம். சக பணியாளர்களுடன் அமைதியான முறையில் பேச வேண்டும்.

உங்கள் துணையுடன் நட்பு முறையில் பழக வேண்டும். இதனால் உறவில் நல்லிணக்கம் பராமரிக்கப்படும்.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். உங்கள் பணத்தை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 30.03.2024




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. இன்று கவலைகள் நிறைந்து காணப்படும். எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டும். நடக்கும் சம்பவங்களை லேசாக எடுத்துக் கொள்ளவேண்டும். உங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் தடைகளை சமாளிக்க வேண்டும்.

பணிகள் கடுமையாக காணப்படும்.அதனை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். பணிகளை நம்பிக்கையுடன் கவனமாக கையாள வேண்டும்.

இன்று உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படாது. உங்கள் நண்பர்களின் தவறான ஆலோசனையை கேட்டு உங்கள் துணையிடம் எதிர்மறையாக நடந்து கொள்வீர்கள்.




இன்று உங்கள் செயல்களில் வெற்றி பெறுவீர்கள். எந்த தடைகளுமின்றி உங்கள் செயல்களில் முன்னேறுவீர்கள். இது உங்களுக்கு சாதகமான நேரம்.

பணியிடத்தில் சாதகமான பலன்கள் கிடைக்கும். உங்கள் பணியில் திருப்தி அடைவீர்கள்.

உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை வெளிப்படுத்துவீர்கள். இருவரும் இனிமையான வார்த்தைகளை பேசி மகிழ்வீர்கள்.

இன்று நிதிநிலை ஸ்திரமாக காணப்படும். எதிர்பாராத பணவரவு காணப்படும்.

உங்களின் மகிழ்ச்சியான மனநிலை காரணமாக இன்று உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று அதிர்ஷ்டமான நாள். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைவீர்கள். இது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

உங்கள் கடின உழைப்பிற்கு நல்ல பலன் கிடைக்கும். புதிய வாய்ப்புகள் உங்களுக்கு கிடைக்கும். அது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

நீங்கள் உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் மகிழ்ச்சியுடன் வெளிப்படுத்துவீர்கள்.இதனால் அன்பு பெருகும்.

இன்று நிதிநிலைமை அபாரமாக இருக்கும். இன்று நீங்கள் சேமிப்பு நிலையை நன்கு பராமரிப்பீர்கள். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று அனைத்து விதத்திலும் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்களிடம் அதிக சிந்தனை காணப்படும். நடக்கும் சம்பவங்களை லேசாக எடுத்துக் கொள்வது சிறந்தது. அமைதியாக இருக்கவும். தியானம் மேற்கொள்ளவும்.

பணி நிமித்தமான பயணம் காணப் படும். சில சவால்களை சந்திக்க நேரலாம். அதிகப் பணிகள் காரணமாக நீங்கள் சோர்வடைவீர்கள்.

உங்களிடம் காணப்படும் அகந்தைப் போக்கு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. நீங்கள் எதிர்பார்க்கும் தொலைவிடத்து பணம் உங்களுக்கு கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

செரிமானம் சம்பந்தமான பிரச்சினைகளால் பாதிக்கப்படுவீர்கள்.







# சுதந்திரக் கட்சியில் இருந்து மைத்திரியை விரட்டுங்கள்!

## முன்னாள் அமைச்சர் மேர்வின் அறைகூவல்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து மைத்திரிபால சிறிசேனவை விரட்டுங்கள் என்று அக்கட்சி உறுப்பினர்களிடம் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது இந்நாட்டில் புரட்சிகரமான அரசியலை முன்னெடுத்த கட்சியாகும். கிராமத்தில் பிறந்தவர்களுக்குக்கூட வாய்ப்பளித்த கட்சியாகும். இப்படிப்பட்ட கட்சியானது மைத்திரியின் தலைமைத்துவத்தின் கீழ் சீரழிந்துள்ளது. எனவே, மைத்திரிபால சிறிசேனவை விரட்டுமாறு கட்சி ஆதரவாளர்களிடம், உறுப்பினர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.



இதுவரை அவர் இழைத்துள்ள தவறுகளே போதுமானவை. அவருக்கு மூளையில் பிரச்சினை இருப்பதையே அவரின் அறிவிப்புகள் வெளிப்படுத்துகின்றது. அரபு நாடாக இருந்திருந்தால் அவர் கல்வீச்சுத் தாக்குதலுக்கு இலக்காகி இருப்பார்.” – என்றார்.




# தனியார் மருந்தக உரிமையாளர் சங்கத்தின் கிரிக்கெட் போட்டி

ஹேமாஸ் பாமசிட்டிகல்ஸ் அனுசரணையில் அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர் சங்கம் கொழும்பு மாவட்டத்தில் நடத்தி வரும் வருடாந்த கிரிக்கெட் போட்டித் தொடர் அண்மையில் நடைபெற்றது.

கொழும்பு ஹவ்லொக் விளையாட்டு மைதானத்தில் இந்தக் கிரிக்கெட் போட்டித் தொடர் இடம்பெற்றது.

இதன்போது அனைத்து மாவட்டங்களிலிருந்தும் அணிகள் பங்குபற்றியிருந்தன.

இந்தநிலையில், கண்டி மற்றும் இரத்தினபுரி மாவட்ட அணிகள் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின. அதில் கண்டி மாவட்ட அணி சம்பியன் பட்டத்தைப் பெற்றுக் கொண்டது.





# துறைமுக நகரத்துக்கான மேம்பால அதிவேக வீதி ஜூலையில் பாவனைக்குக் கையளிக்கப்படவுள்ளது

கொழும்பு - இங்குறுகடை சந்தியில் இருந்து துறைமுக நகரம் வரை தூண்கள் மூலம் நிர்மாணிக்கப்பட்டுள்ள மேம்பால அதிவேக வீதி ஜூலை மாதத்தில் மக்கள் பாவனைக்குக் கையளிக்கப்படவுள்ளது.

5.3 கிலோமீட்டர் நீளமான இந்த அதிவேக வீதி நான்கு ஒழுங்கைகளைக் கொண்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த அதிவேக வீதியின் 80 வீதமான கட்டுமானப் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இங்குறுகடை, புறக்கோட்டை, அளுத்மாவத்தை, காலி முகத்திடல் மற்றும் துறைமுக நகரம் ஆகிய 5 உள்நுழைவுகளை இந்த அதிவேக வீதி கொண்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த அதிவேக வீதியை துறைமுகத்தில் இருந்து இடையூறுகள் இன்றி கொள்கலன்கள் போக்குவரத்திற்கான புதிய உள்நுழைவாக பயன்படுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின் மூலம் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த அதிவேக வீதிக்கு 28 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

# குடு நோனியின் பத்துக் கோடி ரூபா பெறுமதியான சொத்துகள் பறிமுதல்

அஹுங்கல்ல பகுதியில் ‘குடு நோனி’ எனப்படும் போதைப்பொருள் கடத்தல்காரரின் 10 கோடி ரூபா பெறுமதியான சொத்துகள், சட்டவிரோத சொத்துகள் விசாரணைப் பிரிவினரின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளன.

04 வீடுகள், 02 படகுகள், சில வாகனங்கள் ஆகியன நேற்று மேற்படி பிரிவினரின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோத சொத்துகள் விசாரணைப் பிரிவினர் நேற்று அந்தப் பகுதிக்கு சென்று சொத்துககளை பொறுப்பேற்றனர். பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் அவற்றைப் பார்வையிடுவதற்காக அந்தப் பகுதிக்குச் சென்றிருந்தார்.

# ‘யுக்திய’ நடவடிக்கைகளின்போது இதுவரையில் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த 186 பேர் கைது

நாடளாவிய ரீதியில் போதைப் பொருள் வர்த்தகர்கள் மற்றும் விநியோகிக்கும் வலையமைப்பை கட்டுப்படுத்தும் நோக்கில், முன்னெடுக்கப்படும் ‘யுக்திய’ விசேட சோதனை சுற்றிவளைப்புகளில் பாதாள உலகக் கும்பலுடன் தொடர்புடைய 186 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மார்ச் 19 ஆம் திகதி முதல் 28 அம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது இந்தச் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின் போது பாதாள உலக குழுக்களுடன் தொடர்புடைய 10 சந்தேக நபர்களும், அவர்களுக்கு உதவியவர்கள் என்று சந்தேகிக்கப்படும் 05 நபர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள் ளனர்.

இதேவேளை, பாதாள உலக குழுவைச் சேர்ந்தவர்களின் ரூபா 10 கோடிக்கும் அதிகமான சொத்துகள் பொலிஸ் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.



சட்டவிரோதமான சொத்துக்களில் 02 இழுவை படகுகள், முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் காணிகள் உள்ளடங்குகின்றன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலி, அம்பலாங்கொட மற்றும் அஹுங்கல்ல ஆகிய இடங்களில் உள்ள பொலிஸ் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவின் அதிகாரிகளினால் இவை கைப்பற்றப்பட்டுள்ளன.